# TNPSC GROUP II TEST BATCH 2024
## TEST I பொதுத்தமிழ்

1. திரு.வி.க பற்றிய கூற்றுகளில் சரியாக பொருந்தாதது?
   a. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள தண்டலம் இவ்வூர் தற்பொழுது துள்ளம் என அழைக்கப்படுகிறது.
   b. இவர் தொழிலாளர் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபட்டார்.
   c. இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியராகவும் 1920-ஆம் ஆண்டு நவசக்தி என்ற வார இதழினை வெளியிட்டார்.
   d. மேடைத்தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர்
   e. விடை தெரியவில்லை

2. "நாளை என் தாய்மொழி சாகுமானால் - இன்றே தான் இறந்து விடுவேன் ……... என்று கூறியவர்?
   a. ரசூல் கம்சதேவ் b. ரஹ்மான் c. கலீல் கிப்ரான்
   d. டாலன்டாய் e. விடை தெரியவில்லை

3. கூற்று (A) : ஆய்த எழுத்து ஒரு சொல்லின் இடையில் மட்டும் வரும்
   காரணம்(R): அவ்வெழுத்தின் முன் குறிலும், அதன் பின் வல்லின மெய்க்குறிலும் வரும்
   a. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
   b. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
   c. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் தவறு
   d. கூற்று (A) சரி, ஆனால் காரணம் (R) தவறு
   e. விடை தெரியவில்லை

4. ஒளிறுவால் அருஞ்சமம் குடுக்கிக்
   களிறு எறிந்து பெயர்தல் காளைக்கு கடனே – என்னும் பாடல் இடம்பெற்ற எட்டுத்தொகை நூல் எது?
   a. நற்றிணை b. குறுந்தொகை c. அகநானூறு
   d. புறநானூறு e. விடை தெரியவில்லை

5. பொருத்துக:

| | |
|---|---|
| A. பெயர்சொல் | 1. வந்தான் |
| B. வினைச்சொல் | 2. ஐந்தும் ஆறும் |
| C. இடைச்சொல் | 3. மாவீரன் |
| D. வரிச்சொல் | 4. வேலன் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 4 | 1 | 3 | 2 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

6. திரிகடுகம் பற்றிய வாக்கியங்களில் சரியாகப் பொருந்தாதது?
   a. திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லந்துனார்
   b. செரு அடுதோள் நல்லாதன் எனப் பாயிரம் குறிப்பிடுவதனால் இவர் போர் வீரராய் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.
   c. திரிகடுகம் நூறு வெண்பாக்களை உடையது
   d. இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுக்கு ஒன்று
   e. விடை தெரியவில்லை

7. பொருத்துக:

| | |
|---|---|
| a. இடுகுறிப் பொது பெயர் | 1. மரங்கொத்தி |
| b. இடுகுறிப் சிறப்பு பெயர் | 2. பறவை |
| c. காரணம் பொது பெயர் | 3. காடு |
| d. காரணம் சிறப்பு பெயர் | 4. பனை |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 3 | 2 | 4 | 1 |

e. விடை தெரியவில்லை

8. பெரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க 25 நாட்களில் திருக்குறளுக்கு உரை எழுதியவர்?
   a. முடியரசன் b. வாணிதாசன் c. புலவர் குழந்தை
   d. திரு.வி.க e. விடை தெரியவில்லை

9. சரியாகப் பொருத்துக?

| | |
|---|---|
| A. நேற்று எங்கள் பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது | 1. கட்டளைத் தொடர் |
| B. உன் இருப்பிடம் எங்குள்ளது | 2. உணர்ச்சித் தொடர் |
| C. இளமையில் கல் | 3. செய்தித் தொடர் |
| D. என்னே, இந்தே ஓவியத்தின் அழகு! | 4. வினாத் தொடர் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

10. வேளாண் வேதம் என்று அழைக்கப்படும் பதினெண் கீழ்கணக்கு நூல் எது?
   a. பழமொழி நானூறு b. நாலடியார் c. புறநானூறு
   d. அழகின் சிரிப்பு e. விடை தெரியவில்லை

11. கடியலூர் உருத்திரங் கண்ணனார் பத்துப்பாட்டில் பாடிய இரண்டு நூல்கள் எவை?



APPOLO STUDY CENTRE

a. சிறும்பாணாற்றுப்படை. பெறும்பாணாற்றுபடை
b. மதுரைக்காஞ்சி, பெறும்பாணாற்றுப்படை
c. பட்டினப்பாலை, பெறும்பாணாற்றுப்படை
d. முல்லைப்பாட்டு, பெறும்பாணாற்றுப்படை
e. விடை தெரியவில்லை

12. பொருத்துக்
A. வங்கம் 1. பகல்
B. நீகான் 2. கப்பல்
C. எல் 3. கலங்கரை விளக்கம்
D. மாட ஒள்ளெரி 4. நாவாய் ஒட்டுபவன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 4 | 3 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 2 | 3 | 4 | 1 |

e. விடை தெரியவில்லை

13. நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழில் ஆண்ட உரவோன் மருக – என்னும் புறப்பாடல் அடிகளில் குறிப்பிடும் புலவர்
a. நரிவெரு உத்தலையார் b. வெண்ணிக்குயத்தியார் c. பரணர்
d. மணிமேகலை e. விடை தெரியவில்லை

14. பிரித்து எழுதுக: எந்தமிழ்நா
a. எ + தமிழ்நா b. என் + தமிழ்நா c. எம் + தமிழ்நா
d. எம் + தமிழ் + நா e. விடை தெரியவில்லை

15. கூற்று (A) : கருத்துபட ஓவியம் அரசியல் கருத்துகளை எளிமையாக விளக்குவதற்கு பயன்படுத்துகிறோம்
காரணம் (R) : இந்தியா என்ற வார இதழில் பாரதியார் தான் முதன் முதலில் அறிமுகப்படுத்தினார்.
a. கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி
b. கூற்று (A) மற்றும் காரணம் (R) மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமாகும்.
c. கூற்று (A) சரி, ஆனால் காரணம் (R) தவறு
d. கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
e. விடை தெரியவில்லை

16. பொருத்துக:
A. உ.வே.சா. நூல்கம் 1. 1869
B. கீழ்த்திசை நூலகம் 2. 1896
C. கன்னிமாரா நூலகம் 3. 1942
D. அண்ணா நூலகம் 4. 2010

A B C D

| | | | | |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 3 | 2 | 4 | 1 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

17. ரா.பி. சேதுப்பிள்ளை பற்றிய கூற்றுகளில் சரியாக பொருந்தாததை கண்டறிக?
  a. செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றை உரைநடைக்குள் கொண்டு வந்தவர் இவர்
  b. இவரை சொல்லின் செல்வர் எனப்போற்றுவர்
  c. 1955-ஆம் ஆண்டு தமிழின்பம் என்னும் புதினம் சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் நூல்
  d. ஆற்றங்கரையினிலே, கடற்கரையினிலே, தமிழ் விருது, தமிழகம் - ஊரும் பேரும், மேடைப்பேச்சு உள்ளிட்ட பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.
  e. விடை தெரியவில்லை

18. கண்ணியமிகு காயிதே மில்லத் பற்றிய வாக்கியங்களில் சரியாக பொருந்தாததை கண்டறிக?
  a. காயிதே மில்லத் என்னும் அரபுச் சொல்லுக்குச் சமுதாய வழிகாட்டி என்று பொருள்.
  b. இப்படிபட்ட தலைவர் கிடைப்பது அரிது அவர் நல்ல உத்தமமான மனிதர் என்று தந்தை பெரியார் புகழாரம் சூட்டினார்
  c. திருச்சியில் - ∴பருக் கல்லூரி, கேரளாவில் ஐமால் முகம்மது கல்லூரி ஆகியவற்றை தொடங்க அவரே காரணமாக இருந்தார்.
  d. இந்திய நாட்டின் கனிம வளங்களைப் பற்றி நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார்
  e. விடை தெரியவில்லை

19. கீழே கொடுக்கப்பட்ட திருக்குறளில் பயன்று வந்த அணி யாது?
ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்
  a. உருவக அணி
  b. இலபொருள் உவமையணி
  c. எடுத்துகாட்டு உவமையணி
  d. ஏகதேச உருவக அணி
  e. விடை தெரியவில்லை

20. குன்றகுடி அடிகளார் பற்றிய வாக்கியங்களில் சரியானவை எது?
  i. குன்றகுடி திருமடத்தின் தலைவராக விளங்கிய இவர் தமது பேச்சாலும், எழுத்தாலும் இறைத்தொண்டும், சமூக தொண்டும் ஆற்றியவர்.
  ii. திருக்குறள் நெறியை பரப்புவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டவர்.
  iii. நாயன்மார் அடிச்சுவட்டில், குறட்செல்வம், ஆலயங்கள், சமுதாய மையங்கள் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
  iv. குறளோசை, அறிவு அறிவியல் உள்ளிட்ட இதழ்களை நடத்தியுள்ளார்.
  a. i, iv
  b. i, ii, iv
  c. i, ii, iii
  d. மேற்கண்ட அனைத்தும்
  e. விடை தெரியவில்லை

21. டி,கே.சி. பற்றிய வாக்கியங்களில் சரியாகப் பொருந்தாதைப் கண்டறிக?
  a. தமிழ் எழுத்தாளராக புகழ் பெற்றவர்
  b. இரசிகமணி என்று சிறப்பிக்கப்பட்டவர்
  c. இவர் தமது வீட்டில் வட்டத்தொட்டி என்னும் பெயரில் நகைச்சுவைக் கூட்டங்களை நடத்தி வந்தவர்
  d. கடித இலக்கியத்தின் முன்னோடி தமிழிசைக் காவலர், வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர் என பலவாறாக புகழ்படுத்தினார்.



APPOLO STUDY CENTRE

e. விடை தெரியவில்லை

22. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பற்றிய வாக்கியங்களில் தவறானவற்றை கண்டுபிடி?
   a. எளிய தமிழில் திரையிசைப் பாடல்களின் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர்
   b. இவர் மக்கள் கவிஞர் என்னும் சிறப்பு பெயரால் அழைக்கபடுபவர்
   c. பெற்ற தாயின் புகழும் நீ பிறந்த மண்ணின் புகழும்வற்றாமல் உன்னோடு வாழ்ந்திட வேண்டும் என தமிழை விரும்பியவர்
   d. இவர் திரையிசைப் பாடல்களில் உழைப்பாளிகளின் உயர்வை போற்றியவர்
   e. விடை தெரியவில்லை

23. பின்வரும் வாக்கியங்களின் தவறானவற்றை கண்டறிக?
   1. ஆசாரக் கோவையின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார்
   2. பெருவாயின் முள்ளியார் பிறந்த ஊர் கடத்தூர் ஆகும்
   3. இந்நூல் பதினென் மேற்கணக்கு நூல்களுள் ஒன்று
   4. ஆசாரக் கோவை என்பதற்கு நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு என்று பொருள்

   a. 2 மட்டும் b. 3, 4 மட்டும் c. 2, 3 மட்டும்
   d. மேற்கண்ட அனைத்தும் e. விடை தெரியவில்லை

24. கண்ணுறங்கு என்னும் சொல்லைப் பிரித்து எழுதுதக் கிடைப்பது
   a. கண் + உறங்கு b. கண்ணு + உங்கு c. கண் + றங்கு
   d. கண்ணு + றங்கு e. விடை தெரியவில்லை

25. "நடவு நின்ற நன்னெஞ்சினோர்" என்னும் பாடல் இடம் பெற்ற பத்துப்பாட்டு நூல் எது?
   a. மதுரைக்காஞ்சி b. பட்டினப்பாலை c. முல்லைப்பாட்டு
   d. குறிஞ்சிப்பாட்டு e. விடை தெரியவில்லை

26. கீழ்க்கண்டவற்றில் தவறானவற்றை கண்டறிக.
   A. வெய்யவினை 1. துன்பம் தரும் செயல்
   B. வேம்பு 2. கசப்பான சொற்கள்
   C. புகலல்ல ஒண்ணாதே 3. புகழ்ச்சியாக பேசுவது
   D. வீறாப்பு 4. இறுமாப்பு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 1 | 2 | 4 | 3 |
| c. | 4 | 3 | 1 | 2 |
| d. | 4 | 3 | 2 | 1 |

   e. விடை தெரியவில்லை

27. "புல்லாய் பிறந்தேன் நானென்று – நீ புலம்ப வேண்டாம்" ஆசிரியர் யார்?
   a. பாரதிதாசன் b. பாரதியார் c. தாராபாரதி
   d. வ.உ.சி e. விடை தெரியவில்லை

28. பொருத்துக: (தவறானது)
   a. மத்தளம் - லய ஒலி
   b. வீணை - மீட்டொலி
   c. புல்லாங்குழல் - இன்னிசை ஒலி
   d. நாகசுர - நல்லொலி
   e. விடை தெரியவில்லை

29. பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக:
   A. விளைவுக்கு 1. பால்
   B. அறிவுக்கு 2. வேல்

C. இளமைக்கு 3. நீர்

D. புலவர்க்கு 4. தோள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 1 | 3 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

30. மா என்னும் ஓர் எழுத்து ஒருமொழிச் சொல்லின் பொருள் அல்லாதது?

a. துகள் b. மாடம் c. வண்டு

d. அளவு e. விடை தெரியவில்லை

31. ஆய்த எழுத்துகள் பற்றி வாக்கியங்களில் தவறானவற்றை தேர்ந்தெடுக?

a. முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை, இடைநிலை என்று வேறு பெயர்களும் உண்டு.

b. முதல் எழுத்துகளாகிய, உயிரையும், மெய்யையும், சார்ந்து இயக்குவதால் ஆய்த எழுது சர்பெழுத்து ஆகும்.

c. தனக்கு முன் ஒரு குறில் எழுத்தையும் தனக்கு பின் ஒரு மெல்லிய உயிர்மெய் எழுத்தையும் பெற்று சொல்லின் இடையில் மட்டும் வரும்.

d. மூன்று புள்ளிகளை உடைய தனித்த வடிவம் பெற்றது

e. விடை தெரியவில்லை

32. கைலாஷ் சத்யார்த் என்பவர் தொடங்கிய இயக்கம்?

a. குழந்தைகள் உதவி மையம் b. குழந்தைகளை தேசிப்போம்

c. குழந்தைகளை வளர்ப்போம் d. குழந்தைகளை பாதுகாப்போம்

e. விடை தெரியவில்லை

33. மனித நேயத்தின் மகத்தான சாதனையாகத் தம் மகனின் துடிக்கும் இதயத்தையே கொடையாக தந்த இக்கால வள்ளல்கள் தான் …..என்ற மருத்துவத் தம்பதியினர்

a. அசோகன் - புஷ்பா b. அசோகன் - பாஞ்சாலி

c. அசோகன் - புஷ்பாஞ்சலி d. அசோகன் - புவனெஸ்வரி

e. விடை தெரியவில்லை

34. பொருத்துக:

A. பெயர்ச்சொல் 1. மற்று, உம்

B. வினைசொல் 2. தவ, நனி

C. இடைச்சொல் 3. கண், தன்மை

D. உரிச்சொல் 4. விளையாடு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 1 | 2 | 4 | 3 |
| c. | 4 | 3 | 1 | 2 |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

35. எளிய சொற்களை நடைமுறை வாழ்க்கையை ஒட்டிய ஆழ்ந்த கருத்துகளும் கொண்டது எது?

a. காப்பியங்கள் b. புராணங்கள் c. இதிகாசங்கள்

d. நாட்டுப்புறப் பாடல்கள் e. விடை தெரியவில்லை

36. பொருத்துக:

A. நீரின்றிமையாது உலகு — 1. மணிமேகலை
B. பசிப்பினி என்னும் பாவி — 2. புறநானூறு, மணிமேகலை
C. உண்டிகொடுத்தோர், உயிர் கொடுத்தோர் — 3. திருக்குறள்
D. நொறுக்குத் தீனி வயிற்றுக்கு கேடு — 4. பழமொழி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 2 | 1 | 4 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

37. திணையை உரிய நிகழ்வுகளுடன் பொருத்துக்

| திணை | நிகழ்வு |
|---|---|
| A. உழிஞை | 1. எதிர் நின்று போரிடுதல் |
| B. வஞ்சி | 2. பசுக்கூட்டங்களை கவர்தலும் மீட்டலும் |
| C. பாடாண் | 3. வலிமையை நம்பி போராடுதல் |
| D. தும்பை | 4. ஒருவரின் மேன்மைகளை பாடுதல் |
| E. வெட்சி | 5. பகை மன்னரின் கோட்டையை முற்றுகையிடுதல் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 5 | 1 | 4 | 3 | 2 |
| b. | 1 | 2 | 3 | 4 | 5 |
| c. | 4 | 3 | 5 | 2 | 1 |
| d. | 3 | 5 | 2 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

38. பொருள்கோள் எத்தனை வகைப்படும்?
a. 7 b. 8 c. 9 d. 6 e. விடை தெரியவில்லை

39. "DRAVIDIAN FEDERATION" என்னும் ஆங்கில இதழை நடத்திய தமிழறிஞர் யார்?
a. சி. இலக்குவனார்
b. ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை
c. மறைமலையடிகள்
d. திரு.வி. கல்யாண சுந்தரனார்
e. விடை தெரியவில்லை

40. பெயர்ச்சொல் வினையெச்ச பொருள் தரும் பொருட்டு அளவெடுப்பது ________.
a. செய்யுளிசை அளபெடை
b. சொல்லிசை அளபெடை
c. இன்னிசை அளபெடை
d. ஒற்றளபெடை
e. விடை தெரியவில்லை

41. தவறான இணையை காண்க?
a. தேசிய நூலக தினம் - ஆகஸ்ட் 9
b. வெள்ளையனே வெளியேறு இயக்கம் - ஆகஸ்ட் 9
c. உலக தாய்மொழி தினம் - ஆகஸ்ட் 9
d. சர்வதேச பூர்வகுடி தினம் - ஆகஸ்ட் 9

e. விடை தெரியவில்லை

42. பின்வரும் எந்த துறைமுகத்தில் முத்துக்குளித்தல் சிறப்பாக நடைபெற்றதாக மார்கோபோலோ குறிப்பிட்டுள்ளார்
a. முசிறி b. கொற்கை c. காவேரிபூம்பட்டினம்
d. மேற்கண்ட எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

43. கீழே கொடுக்கப்பட்ட சொற்களை அகரவரிசையில் அமைந்த தொடரினை காண்க.
a. மையல், மெல்ல மௌவல், மோர், மேடு, மொட்டு, மிளகு
b. மிளகு, மேடு, மெல்ல, மோர், மையல், மொட்டு, மௌவல்
c. மிளகு, மெல்ல, மேடு, மையல், மொட்டு, மோர், மௌவல்
d. மிளகு, மெல்ல, மொட்டு, மேடு, மையல், மோர், மௌவல்
e. விடை தெரியவில்லை

44. சரியாக பொருந்தாத இணையை கண்டறிக?

| சொல் | இடம் பெற்ற நூல் |
|---|---|
| a. அரசு | - திருக்குறள் |
| b. வேளாண்மை | - திருக்குறள் |
| c. மகிழ்ச்சி | - திருக்குறள் |
| d. மருந்து | - திருக்குறள் |

e. விடை தெரியவில்லை

45. தமிழ்நாட்டில் மாதவிக்கு ஒரு நெடிய சிலை எங்கு நிறுவப்பட்டுள்ளது?
a. காவிரிக்கரை b. காவிரிப்பூம்பட்டினம் c. மதுரை
d. முசிறி e. விடை தெரியவில்லை

46. காட்டைக் குறிக்கும் வேறு பெயர்கள் அல்லாததை தேர்க?
a. கான் b. பொச்சை c. கணையம்
d. வியன் e. விடை தெரியவில்லை

47. இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்
துன்னுநர் சட்டவும் சுட்டு அறிவுறுத்தவும் - என்னும் எட்டுத்தொகை நூல் எது?
a. கலித்தொகை b. பரிபாடல் c. நற்றிணை
d. குறுந்தொகை e. விடை தெரியவில்லை

48. நன்னூலின்படி தமிழில் உள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை?
a. 40 b. 41 c. 42 d. 44 e. விடை தெரியவில்லை

49. திரிகடுகம் குறிப்பிடும் தூயவரின் செயல்களில் பொருந்தாதது எது?
a. நீராடிய பின் உண்ணுதல்
b. எவ்வுயிரையும் துன்புறுத்தாத நிலை
c. உடல் தளர்ந்தாலும் அறிவு ஒழுக்கங்களில் குன்றாதிருத்தல்
d. பெரும்பயன் கிடைத்தாலும் பொய்ச்சாட்டு கூறாதிருத்தல்
e. விடை தெரியவில்லை

50. தாயுமானவர் திருப்பாடல் திரட்டில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை?
a. 1542 b. 1456 c. 1452 d. 5818 e. விடை தெரியவில்லை

51. தவறான கூற்றைத் தேர்வு செய்க?
a. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் ‘மாணிக்கம்’
b. இவர் ‘பாவலரேறு’ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.

c. கனிச்சாறு, கொய்யாக்கனி, நூறாசிரியம், உலகியல் நூறு முதலிய நூல்களை எழுதியுள்ளார்.
d. கனிச்சாறு, என்ற நூல் ஏழு தொகுதிகளாக வெளி வந்துள்ளது. இது தமிழுணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டது
e. விடை தெரியவில்லை

52. ஒரு விளைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது ________ ஆகும்.
a. எஞ்சி நிற்கும் சொல் b. முற்று எச்சம் c. குறிப்பு எச்சம்
d. எச்சமுற்று e. விடை தெரியவில்லை

53. செய்யுளுக்கே உரிய எதுகை, மோனையை உரைநடைக்குள் கொண்ட வந்தவர் யார்?
a. திரு.வி.க. b. தேவநேயப் பாவாணர் c. ரா.பி.சேதுபதி பிள்ளை
d. பாரதி e. விடை தெரியவில்லை

54. பொருந்தாதது எது?

| | |
|---|---|
| i. பரிதிமாற் கலைஞர் | i. நாடகத்தமிழ் |
| ii. சுவாமி விபுலானந்தா | ii. மதங்கசூளாமணி |
| iii. மறைமலையடிகள் | iii. சாகுந்தலம் |
| iv. பம்மல் சம்பந்தனார் | iv. நாடகவியல் |
| v. சங்கரதாஸ் சுவாமிகள் | v. பவளக்கொடி |

a. i மட்டும் b. i, iii, iv மட்டும் c. i, iv மட்டும்
d. iii, iv, v மட்டும் e. விடை தெரியவில்லை

55. கூற்று (A) : நாயன்மார்கள் அறுபத்து மூவராவர்
காரணம் (R) : 63 நாயன்மார்களுள் திருமூலரும் ஒருவர்
a. கூற்று (A) சரி, ஆனால் காரணம் (R) தவறு
b. கூற்று (A) தவறு, காரணம் (R) சரி
c. கூற்று (A) மற்றும், காரணம் (R) இரண்டும் தவறு
d. கூற்று (A) மற்றும், காரணம் (R) இரண்டும் சரி
e. விடை தெரியவில்லை

56. பொருந்தாதது எது?
a. ‘ஓங்கு சீர் மதுரை’ - சிலப்பதிகாரம்
b. ‘மகிழ்நளை மறுகின் மதுரை’ - சிறுபாணாற்றுப்படை
c. ‘தாமரைப் பூவோடு புரையுஞ்சீரூர்’ - பரிபாடல்
d. மாண்புடை மரபின் மதுரை - மதுரைக் காஞ்சி
e. விடை தெரியவில்லை

57. “ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து’ - இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?
a. திருக்குறள் b. திரிகடுகம் c. நாலடியார்
d. நீதி நெறி விளக்கம் e. விடை தெரியவில்லை

58. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் ‘கொட்பின்றி’ அடிகோடிட்ட சொல்லின் பொருள் யாது?
a. வேறுபாடு இன்றி b. துன்பம் இன்றி c. துயரம் இன்றி

d. அறிவு இன்றி e. விடை தெரியவில்லை

59. “அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல் செறிவு பாடலின் வரிகளுக்கேற்ப சரியானதை தேர்வு செய்க
a. தன்கிளை செறா அமை b. புணர்ந்தாரைப் பிரியாமை
c. மறை பிறர் அறியாமை d. கூறியது மறா அமை
e. விடை தெரியவில்லை

60. தமிழ் உரைநடை வடிவங்களில் பொருந்தியுள்ளது எது?
i. கட்டுரை ii. புதினம் iii. சிறுகதை iv. நாவல்
a. அனைத்தும் b. i, ii மட்டும் c. i, ii, iv மட்டும்
d. i மட்டும் e. விடை தெரியவில்லை

61. i. எழுத்து : யாப்பிலக்கணப்படி மூவகைப்படும்.
ii. அசை : நாள், மலர், காசு, பிறப்பு என நால்வகைப்படும்
iii. சீர் : மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர் என நால்வகைப்படும்
iv. தளை : ஒன்றியும் ஒன்றாமலும் வருவதாக எழு உள்ளது
v. அடி : ஐந்து வகைப்படும்
vi. தொடை : ஏழு வகைப்படும்
vii. பா : நால் வகைப்படும்
a. i, iv, v, vii மட்டும் சரி b. ii, iii, iv, vi மட்டும் தவறு
c. அனைத்தும் சரி d. vii தவிர அனைத்தும் தவறு
e. விடை தெரியவில்லை

62. பாரதிதாசனார் தமிழுக்கு வைத்த பெயர்களுள் பொருந்தாதது எது?
a. அமுது b. நிலவு c. வான்
d. மணம் e. விடை தெரியவில்லை

63. பல கடல்களுக்கு அப்பால் எங்கோ தொலைவில் ஒரு நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு கரும்பைக் கொண்டு வந்தவர்கள் எந்த மன்னனின் முன்னோர்கள்
a. அதியன் b. திருமுடிதக்காரி c. தொண்டைமான்
d. நற்கிள்ளி e. விடை தெரியவில்லை

64. மு. மேத்தாவின் ‘ஆகாயத்துக்கு அடுத்த வீடு’ என்ற புதுக்கவிதை நூல் எந்த ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றது?
a. 2005 b. 2006 c. 2007
d. 2008 e. விடை தெரியவில்லை

65. தொழிற்பெயர் அல்லாதது எது?
a. விலை b. கல்வி c. செய்யாமை
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

66. நான்கு வகையான சிற்பக்கலை வடிவமைப்புகளும் காணப்படும் ஒரே இடம் எது?
a. மாமல்லபுரம் b. தஞ்சாவூர் c. கங்கைகொண்ட சோழபுரம்
d. காஞ்சிபுரம் e. விடை தெரியவில்லை

67. யாரை பத்திரமாகப் பாதுகாக்க வேண்டுமென்று காந்தியடிகள் கூறினார்?
a. உ.வே.சா. b. இராஜாஜி c. திரு.வி.க
d. பாரதியார் e. விடை தெரியவில்லை

68. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| A. யானையோடு பேசுதல் | | | 1. பி.ச. குப்புசாமி |
| B. உப்புக்கடலைக் குடிக்கும் பூனை | | | 2. வ. கீதா |
| C. அன்னை பூமி | | | 3. சிவகுமார் |
| D. ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியரின் குறிப்புகள் | | | 4. இராஜலட்சுமி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| c. | 4 | 2 | 3 | 1 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

69. பொருந்தாதது எது?

a. கடல் அலை - தோழன்
b. புயல் - போர்வை
c. சூரியக்கதிர் - மேற்கூரை
d. கட்டு மரம் - வாழும் வீடு
e. விடை தெரியவில்லை

70. பழந்தமிழர் உலோகக் கலைக்கு மாபெரும் எடுத்துக்காட்டாய் இன்றளவும் பறைசாற்றி நிற்பது?

a. தஞ்சை பெரிய கோவில்
b. தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில்
c. கூரம் நடராசர் கோவில்
d. கங்கை கொண்ட சோழபுரம்
e. விடை தெரியவில்லை

71. வள்ளுவரை அறிக?

i. நாடு, மொழி, இனம், சமயம் எல்லாம் கடந்து எக்காலத்துக்கும் பொருத்தமாக பாடியவர்
ii. திரு என்பது அடைமொழி
iii. குறள் என்பது வெண்பாக்களால் பாடல் பாடியவர்
iv. வீரமாமுனிவர் இவரின் நூலை கிரேக்கத்திலும், ஜி.யு. போப் ஆங்கிலத்திலும் மொழிப்பெயர்த்துள்ளனார்.
v. மாதானுபங்கி, பெருநாவலர், செந்நாப்போதார், தேவர் முதலிய பெயர்களால் அழைக்கப்படுகிறார்

a. அனைத்தும் சரி
b. i, ii, iii, v சரி
c. i, ii, iii, iv சரி
d. iv, v சரி
e. விடை தெரியவில்லை

72. ‘காய்கவர்ந்தற்று’ பிரித்து எழுதுக.

a. காய் + கவர்ந்து + அற்று
b. காய் + கவர்ந்து + தற்று
c. காய் + கவர் + தற்று
d. காய் + கவர்ந்து + அற்று
e. விடை தெரியவில்லை

73. ஔவையின் “மூத்தோர் கூறம் அறிவுரை’ என்ற பொருள் உடைய நூலின் பாடல் எண்ணிக்கை?

a. 31
b. 30
c. 32
d. 33
e. விடை தெரியவில்லை

74. ஒப்பிட்டுக் கூறப்படும் பொருள் __________ என்பர்
உவமையால் விளக்கப்படும் பொருள் ________ என்பர்
a. உவமை, உருவகம்
b. உவமேயம், உவமானம்
c. உவமை, உவமேயம்
d. உவமேயம், உருவகம்
e. விடை தெரியவில்லை

75. மலைப்பொழிவு என்ற பகுதி இடம்பெற்றுள்ள நூல் எது?
a. இயேசு காவியம்
b. ஒப்புரவு நெறி
c. இதய ஒலி
d. பெய்து பழகிய மேகம்
e. விடை தெரியவில்லை

76. கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் எப்போது கட்டப்பட்டது?
a. உ-க0-உ00க
b. கரு-எ-உ000
c. கரு-எ-உ00க
d. உ-க0-உ000
e. விடை தெரியவில்லை

77. சமுதாயச் சிக்கல்களை எள்ளல் சுவையோடு வெளிப்படும் கவிதைகள் யாருடையது?
a. தேனரசன்
b. சுப்ரபாரதிமணியன்
c. கண்ணதாசன்
d. சே. பிருந்தா
e. விடை தெரியவில்லை

78. தவறானது எது?
i. இயற்சொல் - கடல், கப்பல், எழுதினான், படித்தான்
ii. திரிசொல் - வங்கழ், அழவம், காற்றினான், உறுபயன்
iii. திசைசொல் - வருடம், மாதம், சாவி, பண்டிகை
iv. வடசொல் - சன்னல், விடம், சக்கரம், கமலம்
a. i, ii, iii, iv
b. i, ii மட்டும்
c. ii, iii மட்டும்
d. iii, iv மட்டும்
e. விடை தெரியவில்லை

79. துணி ஓவியங்கள் தற்போது எந்த பகுதியில் வாழும் ஓவியர்களால் கலம்காரி ஓவியங்கள் என வரையறுக்கப்படுகின்றன?
a. தமிழகம்
b. தமிழகம் மற்றும் அந்திரா
c. தமிழகம் மற்றும் ஒடிசா
d. அனைத்தும்
e. விடை தெரியவில்லை

80. தொல்காப்பிய பாடல்வழி ஐம்பூதங்களை வரிசைப்படுத்துக?
a. நிலம், தீ, நீர், விசும்பு, வளி
b. தீ. நிலம், நீர், விசும்பு, வளி
c. நீர், நிலம், தீ, விசும்பு, வளி
d. நிலம், நீர், தீ, வளி, விசும்பு
e. விடை தெரியவில்லை

81. மதுரை ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடும், பாவாணரின் சொற்பொழிவும்?
a. 05.01.1981 மற்றும் மாந்தன் மரபும் பண்பாடும்
b. 05.01.1981 மற்றுமு் மாந்தன் மரபும் தமிழர் தோற்றமும்
c. 05.01.1981 மற்றும் மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்
d. 05.01.1981 மற்றும் தமிழர் மரபும் மாந்தன் தோற்றமும்
e. விடை தெரியவில்லை

82. பலவகைப்பட்ட பண்புகளைக் கொண்டு பெயர்ச்சொற்கள் வினைச் சொற்களை விட்டு நீங்காது செய்யுளுக்கே உரிமை பெற்று வருவன?
a. பெயர்ச் சொல்
b. வினைச்சொல்
c. இடைச்சொல்

d. உரிச்சொல் e. விடை தெரியவில்லை

83. தனிக்குறிலை அடுத்து நகர ஒற்று வந்தால் அது
a. பிறமொழி சொல் b. வடமொழி சொல் c. திசைச்சொல்
d. திரி சொல் e. விடை தெரியவில்லை

84. நேருவின் கடிதத்தில் தவறானது எது?
i. அற்புதமான ஆங்கில படைப்பாளிகள் - சேக்ஸ்பியர்
ii. வாசிக்க வேண்டிய நூல் - டால்ஸ்டாயின் போரும் அமைதியும்
iii. வாசிக்க தகுந்தவை - பெர்னாட்ஷாவின் நூல்கள்
iv. சுவையானவை சிந்தனையை தூண்டுபவை - பிளேட்டோவின் புத்தகங்கள்
a. i, ii, iii மட்டும் b. i, iii மட்டும் c. i, ii மட்டும்
d. i, iv மட்டும் e. விடை தெரியவில்லை

85. பொருந்தாதது எது?
i. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் - திரு.வி.க
ii. தமிழின்பம் - ஈரோடு தமிழன்பன்
iii. தமிழ் விருந்து - இராமலிங்கம் பிள்ளை
iv. தமிழியக்கம் - மு. வரதராசனார்
a. i, ii, iii மட்டும் b. i, iii, iv மட்டும் c. i, ii, iii, iv மட்டும்
d. i, ii, iv மட்டும் e. விடை தெரியவில்லை

86. பின்வரும் கூற்றுகளை கவனி?
i. கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவென்று பாடியவர் ஔவையார்
ii. இங்கு குறிப்பிடும் ஔவையார் சங்க கால ஔவையார்
iii. சங்க காலத்துக்குப் பின் வாழ்ந்த ஔவையாரின் பாடல்கள் தனிப் பாடல் திரட்டு என்ற நூலில் இடம் பெற்றுள்ளது
iv. தனிப்பாடல் திரட்டு இராமநாதபுர மன்னன் சந்திரசேகர கவிராசப் பண்டிதரின் வேண்டுதலுக்கிணங்க புலவர் பொன்னுசாமியால் தமிழகம் முழுவதும் சென்ற தொகுக்கப்பட்டது
a. i, ii, iii மட்டும் சரி b. i, iii, iv மட்டும் சரி c. அனைத்தும் சரி
d. i, iii மட்டும் சரி ii, iv தவறு e. விடை தெரியவில்லை

87. குமரகுருபரர் பற்றிய வாக்கியங்களை உற்றுநோக்குக?
i. பிறப்பு - திருச்சி மாவட்டம் திருவைகுண்டம்
ii. காலம் - 16 அல்லது 17ஆம் நூற்றாண்டு
iii. திருவாரூர் முருகப் பெருமாள் மீது நான்மணிமாலை என்ற சிற்றிலக்கியத்தை பாடியுள்ளார்
iv. நான்மணிமாலை என்பது முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்ற நால்வகை மணிகளால் ஆன மாலை
v. அதுபோல நால்வகைப் பாடல்களால் (வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆசிரிய விருத்தம், வஞ்சிப்பா) ஆன நாற்பது செய்யுள்களைக் கொண்டது திருவாரூர் நான்மணிமாலை
a. i, iii, v தவறு ii, iv சரி b. i, v தவறு ii, iii, iv சரி

c. அனைத்தும் சரி d. v தவறு i, iii, ii, iv சரி
e. விடை தெரியவில்லை

88. பொருத்துக:

| | | |
|---|---|---|
| i. பிம்பெர்னாலீ | 1. உலகளாவிய வலைப்பின்னல் | அ. பிரான்ஸ் |
| ii. சார்லஸ் பாப்பேஜ் | 2. கணக்கிடும் கருவி | ஆ. அமெரிக்கா |
| iii. பிளேஸ் பாஸ்கல் | 3. இணையம் | இ. இங்கிலாந்து |
| iv. ஜான் பாஸ்டல் | 4. கணினி | ஈ. சுவிட்சர்லாந்து |

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| a. | 1-இ | 2–அ | 4-ஈ | 3-ஆ |
| b. | 1-ஆ | 3-ஈ | 2-அ | 4-இ |
| c. | 1-ஈ | 4-இ | 2-அ | 3-ஆ |
| d. | 1-அ | 4-ஆ | 3-இ | 2-ஈ |

e. விடை தெரியவில்லை

89. நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது போன்ற பொருள்களில் வரும் வேற்றுமை
a. ஐந்தாம் b. ஆறாம் c. ஏழாம்
d. மூன்றாம் e. விடை தெரியவில்லை

90. மொழிக்கெல்லாம் மூத்தவளே! மூவேந்தர் அன்பே! என்று செந்தமிழை பாடிய கவிஞர்?
a. பாரதியார் b. நாமக்கல் கவிஞர் c. து. அரங்கன்
d. தமிழன்பன் e. விடை தெரியவில்லை

91. கோமகள் பற்றிய வாக்கயிங்களில் தவறானது?
a. இவரின் இயற்பெயர் இராஜலட்சுமி
b. இவரது 'அன்னன் பூமி' என்னும் புதினம் தமிழ்நாடு விருதினைப் பெற்றது
c. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை விருதினையும் பெற்றுள்ளார்
d. 'பால் மனம்' எனும் இக்கதை அ. வண்ண நீலவன் தொகுத்த மீதமிருக்கும் கொற்கள் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது
e. விடை தெரியவில்லை

92. மன்னும் உயிர்க் குணங்கள் எல்லாம்
குறைவறப் பெற்றவள் நீ
குலமாதே பெண்ணரசி – என்ற பாடலின் ஆசிரியர் யார்?
a. மீரா b. ஆலங்குடி சோமு c. இரா. இளங்குமரனார்
d. இறையரசன் e. விடை தெரியவில்லை

93. பின்வருவனவற்றுள் தவறான இணையைக் காண்க?
a. நான்காம் வேற்றுமை விளி - வல்லினம் மிகும்
b. உருவகம் - வல்லினம் மிகும்
c. திசைப்பெயர்கள் - வல்லினம் மிகும்
d. எதிர்மறைப் பெயரெச்சம் - வல்லினம் மிகும்
e. விடை தெரியவில்லை

94. பி.ஆர். அம்பேத்கர் குறித்த வாக்கியங்களில் தவறானது?
1. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராக இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாகவும் விளங்கினார்.
2. இவர் 1891-04-14 ஆம் நாள் ராம்ஜி சக்பால் - பீமாபாய் இணையருக்குப் பதினைந்தாவது குழந்தையாகப் பிறந்தார்.

3. அம்பேத்கர் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள இரத்தினகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பவாதே என்னும் ஊரில் பிறந்தார்.
4. அம்பேத்கர் சதாராவில் உள்ள பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கினார்.

a. 1 மற்றும் 4 b. 2 மற்றும் 3 c. 4 மட்டும்
d. 2 மட்டும் e. விடை தெரியவில்லை

95. எழுத்துகளின் இடம்பிறப்பைச் சரியாகப் பொருத்துக:

i. மெல்லின மெய்கள் 1. மூக்கு
ii. வல்லின மெய்கள் 2. கழுத்து
iii. இடையின மெய்கள் 3. மார்பு
iv. உயிர் எழுத்துகள் 4. கழுத்து

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 4 | 2 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 1 | 4 | 3 | 2 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

96. பின்வரும் வாக்கியங்களில் சரியாகப் பொருந்தாதது?

a. வானம்பாடி இயக்கக் கவிஞர்கள் குறிப்பிடத்தக்கவர் மு. மேத்தா
b. கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம், முகத்துக்கு முகம், வெளிச்சம் இல்லை, தேசப்பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி முலியவை இவரின் கவிதை ஆகும்.
c. கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்
d. மு. மேத்தா எழுதிய 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு' என்னும் புதுக்கவிதை நூலுக்காக 1997 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது
e. விடை தெரியவில்லை

97. பொருத்துக:

A. மெய்யொலி 1. Consonant
B. உயிரொலி 2. Vowel
C. ஒலியன் 3. Pictograph
D. சித்திர எழுத்து 4. Phoneme

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 1 | 2 | 4 | 3 |
| c. | 2 | 1 | 4 | 3 |
| d. | 1 | 2 | 3 | 4 |

98. மனிஷ் சாண்டி, மாதுரி ரமேஷ் ஆகியோர் தொகுத்த காடர்களின் கதையை தமிழில் எழுதியவர்?

a. பி.ச. குப்புசாமி b. வ. கீதா c. சிவக்குமார்
d. பக்தவச்சல் பாரதி e. விடை தெரியவில்லை

99. பொருந்தாதது எது?

a. தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார் - சுந்தரர் தேவாரம்
b. பாணன் சூடான் பாடினி அணியாள் - புறநானூறு
c. சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் - திருப்பாவை
d. குழல் இனிது யாழ் இனிது - திருக்குறள்
e. விடை தெரியவில்லை

100. ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்



APPOLO STUDY CENTRE

பேர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றே – என்ற நீலகேசி பாடலடிகள் இடம் பெற்றுள்ள சுருக்கம்?

a. மொக்கலவாதச் சுருக்கம்  b. தருமவுரைச் சுருக்கம்
c. புத்தவாதச் சுருக்கம்  d. பூதவாத சுருக்கம்
e. விடை தெரியவில்லை

101. ‘கல்வி கரையில கற்பவர் நாள்சில’ என்ற வரிகள் இடம் பெற்றுள்ள நூல்

a. நாலடியார்  b. நான்மணிக்கடிகை  c. நீதிநெறி விளக்கம்
d. அறநெறிச்சாரம்  e. விடை தெரியவில்லை

102. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| A. | காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல | 1. | ஒற்றுமையின்மை |
| B. | கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல | 2. | பயனற்ற செயல் |
| C. | பசுமரத்து ஆணி போல | 3. | தற்செயல் விடுப்பு |
| D. | விழலுக்கு இறைத்த நீர் போல | 4. | எதிர்பாரா நிகழ்வு |
| E. | நெல்லிகாய் மூட்டையைக் கொட்டினாற்போல | 5. | எளிதில் மனத்தில் பதித்தல் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 5 | 1 |
| b. | 4 | 3 | 1 | 5 | 2 |
| c. | 4 | 3 | 2 | 5 | 1 |
| d. | 3 | 4 | 5 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

103. சொல்லும் பொருளும் பொருந்தும்

| | | | |
|---|---|---|---|
| i. | சேகரம் | 1. | மிகவும் |
| ii. | வின்னம் | 2. | சரியாக |
| iii. | வாகு | 3. | சேதம் |
| iv. | மெத்த | 4. | கூட்டம் |

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 1 | 3 | 2 | 4 |
| d. | 4 | 2 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

104. ஜெயகாந்தனோடு நெருங்கிப் பழகி ‘ஜெயகாந்தனோடு பல்லாண்டு’ என்னும் நூலை எழுதியுள்ளார்?

a. சிவக்குமார்  b. இறையரசன்  c. குப்புசாமி
d. செ. இராசு  e. விடை தெரியவில்லை

105. இல் என்னும் வேற்றுமை உருபு ஏழு மற்றும் ஐந்தாம் வேற்றுமைகளில் முறையே வரும் பொருள்கள்?

a. கிழமை, ஒப்பு  b. கிழமை, நீங்கல்  c. இடம், நீங்கல்
d. இடம், கிழமை  e. விடை தெரியவில்லை

106. ‘ஆத்திரம் கண்ணை மறைத்திடும் போது அறிவுக்கு வேலை கொடு’ என்று பாடல்களைப் பாடியவர்?

a. சோமு  b. கலியாண சுந்தரம்  c. நாராயணகவி
d. மருதகாசி  e. விடை தெரியவில்லை

107. யாழினை நரம்புகளின் எண்ணிக்கையோடு பொருத்துக?

| | | | | |
|---|---|---|---|---|
| i. சிறியாழ் | | | 1. 21 | |
| ii. மகரயாழ் | | | 2. 7 | |
| iii. சகோடயாழ் | | | 3. 19 | |
| iv. பேரியாழ் | | | 4. 14 | |
| | i | ii | iii | iv |
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 4 | 2 | 1 | 3 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 2 | 4 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

108. 'கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தும் பெறுங்காலமே. தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும் என்று குறிப்பிட்டவர்?

a. திரு.வி.க b. மு.வ c. மறைமலையடிகள்
d. குன்றக்குடி அடிகள் e. விடை தெரியவில்லை

109. வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது __________ இன்பம் ஆகும்.

a. இசை b. காப்பியம் c. இயற்கை d. தமிழ் e. விடை தெரியவில்லை

110. கூற்று 1 : பாண்டிய மன்னர்களுக்கு உரிய பூ - வேப்பம் பூ
கூற்று 2 : போந்தை வேம்பே ஆரென வருஉம் மாபெருத் தானையர் மலைத்த பூவும்' என்று தொல்காப்பியம் சேரரை முன் வைக்கிறது

a. கூற்று 1, 2 இரண்டும் சரி b. கூற்று 1 சரி, 2 தவறு
c. கூற்று 1 தவறு, 2 சரி d. கூற்று 1, 2 இரண்டும் தவறு
e. விடை தெரியவில்லை

111. கலித்தொகை திணைகளை வரிசைப்படுத்தவும்?

a. மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை
b. பாலை, குறிஞ்சி மருதம், செய்தல். முல்லை
c. குறிஞ்சி, முல்லை, மருதம், செய்தல், பாலை
d. குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல், முல்லை
e. விடை தெரியவில்லை

112. சிறந்த ஆட்சியின் பண்பாக திருவள்ளுவர் குறிப்பிடுவது?

a. ஒரு பக்க சார்பு இன்றி நடுவநிலையில் நிற்பது
b. உலக உயிர்களை காப்பாற்றுவது
c. குற்றத்தை முறையாக ஆராய்ந்து தண்டிப்பது
d. படை வலிமையோடு திகழ்தல்
e. விடை தெரியவில்லை

113. கான முயல் எய்த அம்பிணில் யானை
பிழைத்தவேல் எந்தல் இனிது - இக்குறளில் பயின்று வந்த அணி?

a. ஏகதேச உருவக அணி b. உவமை அணி c. பிறிது மொழிதல் அணி
d. வேற்றுமை அணி e. விடை தெரியவில்லை

114. பொருத்துக:

A. இன்பம் தருவது 1. நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம்
B. நட்பு என்பது 2. குன்றிமணியளவு தவறு

C. பெருமையை அழிப்பது 3. செல்வம் மிகுந்த காலம்
D. பணிவு கொள்ளும் காலம் 4. சிரித்து மகிழ மட்டுமன்று
E. பயனின்றி அழிவது 5. பண்பு

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 5 | 4 | 2 | 3 | 1 |
| b. | 5 | 2 | 1 | 4 | 3 |
| c. | 3 | 5 | 1 | 2 | 4 |
| d. | 4 | 5 | 3 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

115. தமிழ் நவீன இலக்கியத்தை தொடக்க காலத்தில் செழமைப்படுத்தியவர்?
a. வ.வே.சு b. சொ. விருத்தாசலம் c. ஜெயகாந்தன்
d. அகிலன் e. விடை தெரியவில்லை

116. நாமக்கல் கவிஞர் பற்றிய கூற்றுகளைக் கவனிக்க.
i. தமிழறிஞர், கவிஞர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர்
ii. தமிழக அரசு இவரை முதல் அரசவைக் கவிஞராகவும், சட்டமேலவை உறுப்பினராகவும் நியமித்துச் சிறப்பித்தது
iii. நடுவணரசு இவருக்கு பத்மபூசண் விருதளித்துப் போற்றியுள்ளது.
iv. எங்கள் தமிழெனும் தேன்மொழியாம் என்ற பாடல் நாமக்கல் கவிஞர் பாடல்கள் நூலில் இடம்பெற்றுள்ளது
a. அனைத்தும் சரி b. i, ii, iv சரி iii தவறு c. i, ii, iv சரி iii தவறு
d. i, iii, iv சரி ii தவறு e. விடை தெரியவில்லை

117. '__________ ல் விழுந்த _________ க்கு அதுவே சொர்க்கம்' சொலவடையை நிறைவு செய்க.
a. அகழி, மீன் b. ஆறு, முதலை c. அகழி, முதலை
d. கிணறு, தவளை e. விடை தெரியவில்லை

118. ஐகாரம் சொல்லின் இறுதி, முதல், இடையில், வரும் பொழுது மாத்திரை அளவு முறையே
a. 1, 1, 1½, b. 1, 1½, 1 c. 1½, 1, 1,
d. 1, 1, 1 e. விடை தெரியவில்லை

119. சரியானது எது?
a. யானைக் கொட்டில் குதிரைக் கூடம்
b. யானைத் தொழுவம் குதிரைக் கூடம்
c. யானைக் கூடம் குதிரைத் தொழுவம்
d. யானைக் கூடம் குதிரைக் கொட்டில்
e. விடை தெரியவில்லை

120. பொருத்துக:
i. இல்முன் 1. இடக்கரடக்கல்
ii. நுனிக்கிளை 2. மங்கலம்
iii. நன்காடு 3. இலக்கணப்போலி
iv. கால் கழுவி வந்தேன் 4. இலக்கணமுடையது

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 4 | 1 | 2 |

c. 3 4 2 1
d. 4 3 1 2
e. விடை தெரியவில்லை

121. கூற்று 1 : வடமொழி எழுத்துகளைத் தமிழில் மாற்றி எழுதுவதை தற்பவம் என்பர். எ.கா. விஷம் - விடம்
கூற்று 2 : வடமொழியில் இருப்பது போன்றே, தமிழில் எழுதுவதை தற்சமம் என்பர். எ.கா. சக்கரம்
a. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
b. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
c. கூற்று 1, 2 இரண்டும் சரி
d. கூற்று 1, 2 இரண்டும் தவறு
e. விடை தெரியவில்லை

122. சுப்ரபாரதிமணியன் பற்றியக் கூற்றுகளில் சரியானது அல்லாதது எது?
a. பள்ளி மறுதிறப்பு என்ற கதையை எழுதியவர்
b. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, இயற்கை வளங்களை பாதுகாத்தல் போன்ற கருத்துகளில் சிறுகதை, புதினம் கட்டுரை முதலியவற்றை எழுதியுள்ளார்.
c. ‘கனவு என்ற மாத இதழை நடத்தி வருகிறார்.
d. பின்னல், வேட்டை, தண்ணீர்யுத்தம், புத்துமண், கதை சொல்லும்கலை ஆகியவை இவரது நூல்களாகும்.
e. விடை தெரியவில்லை

123. பொருந்துக
i. கற்றும் முறை — 1. செயல்
ii. உயிர்க்கு கண்கள் — 2. காகம்
iii. விழுச்செல்வம் — 3. பிழையில்லாமல்
iv. எண்ணித்துணிக — 4. எண்ணும் எழுத்தும்
v. கரவா கரைந்துண்டும் — 5. கல்வி

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 | 5 |
| b. | 3 | 2 | 1 | 5 | 4 |
| c. | 3 | 4 | 1 | 5 | 2 |
| d. | 3 | 4 | 5 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

124. பொருந்தாதது எது?
a. திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி - திருஞானசம்பந்தர்
b. தன்பொருநைப் புனல்நாடு - சேக்கிழார்
c. பதியெழு அறியாப் பழங்குடி - இளங்கோவடிகள்
d. திங்கள் நாள்விழா மல்கு திருநெல்வேலி - திருநாவுக்கரசர்
e. விடை தெரியவில்லை

125. ‘தமிழ்ழ் வேதம்’ என்றழைக்கப்படும் நூல்
a. திருவாய்மொழி
b. திருமந்திரம்
c. திருப்பாவை
d. தேவாரம்
e. விடை தெரியவில்லை

126. பொய்கையாழ்வார் பற்றிய கூற்றுகளில் சரியானதை தேர்ந்டுக்க
i. பிறந்த ஊர், தஞ்சாவூர் அருகிலுள்ள திருவெ.ஃகா
ii. இவர் பாடிய முதல் திருவந்தாதி வாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் முதல் பகுதியாகும்.
iii. அதன் முதல் பாடல் ‘வையம் தகளியா வார்கடலே நெய்யக் என்பதாகும்

a. i, ii, iii சரி b. i, ii சரி iii தவறு c. ii, iii சரி, 1 தவறு
d. i, iii சரி ii தவறு e. விடை தெரியவில்லை

127. “உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்” – என்ற குறள் அமைந்துள்ள அதிகாரம்
a. வெகுளாமை b. வாய்மை c. அருளுடைமை
d. கள்ளாமை e. விடை தெரியவில்லை

128. இந்தியாவின் வனமகன் (Forest man of India) என்ற பட்டத்தை ஜாதவுக்கு ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் வழங்கிய ஆண்டு
a. 2012 b. 2010 c. 2014
d. 2015 e. விடை தெரியவில்லை

129. பொருத்துக:

| | |
|---|---|
| i. காவற்புரைத்தெரு | 1. தானிய வீதி |
| ii. ஊழைக்கடைத் தெரு | 2. சிறைச்சாலை |
| iii. அக்கசாலைத் தெரு | 3. பொன் செய்பவர்கள் வாழும் வீதி |
| iv. மாடவீதி | 4. கோவிலை சுற்றியுள்ள வீதிகள் |

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

130. ‘துயின்றிருந்தார்’ பிரித்தெழுதுக.
a. துயின்று + இருந்தார் b. துயின்றி + இருந்தார்
c. துயல் + இன்றி + இருந்தார் d. துயின்றிரு + இருந்தார்
e. விடை தெரியவில்லை

131. அ∴றிணை என்ற சொல்லில் தனிநிலையின் மாத்திரையளவு
a. ½ b. ¼ c. 4¼ d. 4½ e. விடை தெரியவில்லை

132. பொருத்துக:

| | |
|---|---|
| i. பாய் மரக்கப்பல் | 1. சேதுப்பிள்ளை |
| ii. தண்ணீர் யுத்தம் | 2. குன்றக்குடி அடிகள் |
| iii. மேடைப்பேச்சு | 3. பாவண்ணன் |
| iv. குறட்செல்வம் | 4. சுப்ரபாரதிமணியன் |

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

133. கப்பலின் உறுப்புகள்

i. அடிமரம் - எரா
ii. குறுக்குமரம் - பருமல்
iii. கப்பலை உரிய திசையில் திருப்பயன்படும் கருவி – சமுக்கு
iv. கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க – நங்கூரம்
v. காந்த ஊசி பொருத்தப்பட்ட திசைகாட்டும் கருவி – சுக்கான்
a. அனைத்தும் சரி
b. i, ii, iii, iv சரி v தவறு
c. i, ii, iv சரி iii, v தவறு
d. i, ii, iii, v சரி iv தவறு
e. விடை தெரியவில்லை

134. "இன்பத்தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்
துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மையுண்டாகும் வீரம் வரும்"
என்ற அடிகள் பாரதிதாசன் கவிதைகள் நூலில் எந்த தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளது?
a. எங்கள் தமிழ்
b. தமிழ்ப்பேறு
c. இன்பத்தமிழ்க்கல்வி
d. தேன்தமிழ்
e. விடை தெரியவில்லை

135. பொருத்துக:

| | | |
|---|---|---|
| i. தே | | 1. கடவுள் |
| ii. நே | | 2. அன்பு |
| iii. கூ | | 3. பூமி |
| iv. சே | | 4. உயர்வு |

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 4 | 2 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

136. 'காடும் கழனியும்' - இலக்கணம் காண்க.
a. முற்றும்மை
b. சிறப்பும்மை
c. எண்ணும்மை
d. உயர்வு சிறப்பும்மை
e. விடை தெரியவில்லை

137. வ.உ.சி.க்கு சிறையில் உதவியது
i. செந்தமிழ் - செக்கிழுத்த துயரை மாற்றியது
ii. கன்னித்தமிழ் - கண்ணீரை மாற்றியது
iii. தொல்காப்பியம் - தொல்லைகளை மறக்க செய்தது
iv. திருக்குறள் - உள்ளம் தழைத்தியது
v. இன்னிலை - இன்னல்களை வெல்ல உதவியது
a. அனைத்தும் சரி
b. ii தவறு
c. ii, iv தவறு
d. iv தவறு
e. விடை தெரியவில்லை

138. சுரதாவின் தமிழக அரசின் வளர்ச்சித்துறை பரிசு பெற்ற நூல்
a. தேன்மழை (கவிதை) – 1969
b. துறைமுகம் (பாடல் தொகுப்பு) – 1976
c. தேன்மழை (கவிதை) - 1966
d. துறைமுகம் (பாடல் தொகுப்பு) – 1969

APOLLO STUDY CENTRE

e. விடை தெரியவில்லை

139. பேச்சுமொழி, எழுத்துமொழி பற்றியக் கூற்றுகளில் சரியானதல்லாதது எது
- i. தொல்காப்பியர் இவற்றை உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்று கூறியுள்ளார்.
- ii. மொழியின் உயிர்நாடியாக விளங்குவது எழுத்துமொழியே என்பர். இது கருத்தை வெளிப்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.
- iii. மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர்
- iv. பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவு வேறுபாடு இருந்தால் அஃது இரட்டை வழக்கு மொழி (Diglossia Language) எனப்படும்.

a. அனைத்தும் சரி b. i, ii, iii மட்டும் சரி c. i, iii, iv மட்டும் சரி
d. i, ii, iv மட்டும் சரி e. விடை தெரியவில்லை

140. இயற்கை வங்கூழ் அடிக்கோடிட்ட சொல்லின்பொருள்
a. கடல் b. காற்று c. அலை
d. நீர் e. விடை தெரியவில்லை

141. பொருத்துக:

| | |
|---|---|
| i. மலைப்பொழிவு | 1. கி.வா. ஜகந்நாதன் |
| ii. மலை அருவி | 2. தேனரசன் |
| iii. மண்வாசல் | 3. பிருந்தா |
| iv. வீடுமுழுக்க வானம் | 4. கண்ணதாசன் |

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 4 | 2 | 3 | 1 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

142. பகுபத உறுப்புகள் பற்றிய கூற்றினை கவனிக்க:
- i. பகுதி – முதன்மையான பொருளை தருவது, மேலும் வினை என இரண்டு பகுபதங்களிலும் பகுதி கட்டளையாகவே அமையும்.
- ii. விகுதி – திணை, பால், எண், இடம், எச்சம், காலம் ஆகியவற்றை வெளிபடுத்தும்

a. இரண்டும் சரி b. i சரி ii தவறு c. i தவறு ii சரி
d. இரண்டும் தவறு e. விடை தெரியவில்லை

143. அடுக்குத்தொடரில் ஒரே சொல் அதிகபட்சம் எத்தனை முறை அடுக்கிவரும்
a. மூன்று b. இரண்டு c. நான்கு
d. ஐந்து e. விடை தெரியவில்லை

144. "உடன்பாடு" இலக்கண குறிப்பு?
a. முதனிலை திரிந்த தொழிற்பெயர் b. தொழிற்பெயர்
c. முதனிலை தொழிற்பெயர் d. வினைமுற்று
e. விடை தெரியவில்லை

145. 'தமிழ்கெழுகூடல்' என மதுரையைப் போற்றும் நூல் எது?
a. புறநானூறு b. பரிபாடல் c. மதுரைக் காஞ்சி
d. நெடுநல்வாடை e. விடை தெரியவில்லை

146. சங்கரதாஸ் சுவாமிகள் ஒரே இரவில் எழுதிய நாடக நூல்
a. வள்ளி திருமணம் b. சதி அனுசுயா
c. அபிமன்யு சுந்தரி d. பவளக்கொடி
e. விடை தெரியவில்லை

147. ‘தமிழ்மொழி அழகான சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளித்தட்டு, திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள்’ என்று கூறியவர்
a. கால்டுவெல் b. டாக்டர் கிரௌல் c. ஜி.யு. போப்
d. வீரமாமுனிவர் e. விடை தெரியவில்லை

148. ‘ஆய்லராக இல்லாவிட்டாலும் இராமனுஜன் குறைந்தபட்சம் ஒரு ஜாகோபி’ என்று கூறியவர்
a. இந்திரா காந்தி b. லார்ட்மெண்ட் லண்ட்
c. லிட்டில் வுட் d. பேராசிரியர் சூலியன் கக்சுலி
e. விடை தெரியவில்லை

149. இருபொருள் அமைய நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர்
a. இராமசந்திர கவிராயர் b. அழகிய மணவாளதாசர்
c. வேங்கடசாமி நாட்டார் d. காளமேகப்புலவர்
e. விடை




தெரியவில்லை

150. யாருடைய ஆங்கிலப் பேச்சு வெள்ளியைப் போல ஒளிவிட்டாலும், அவரது தாய்மொழிப் பேச்சு, தங்கத்தைப் போன்று ஒளி வீசுகின்றது என்று காந்தி கூறினார்.
a. தாகூர் b. மதன் மோகன் மாளவியா
c. முன்சிராம் d. J.C. போஸ்
e. விடை தெரியவில்லை